இடம்பெற்ற 100 ... போட்டியில் சிறந்த ... மாணவியர்கள் கொண்டனர். ... மாணவ பலர் கலந்து



# கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியில் புதிய கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி மையம் திறப்பு

ஒண்டிப்புதூர், செப். 28—

கோவை அவிநாசி சாலை பீளமேடு பகுதியில் உள்ள பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியும், எல்ஜி நிறுவனமும் இணைந்து தொழில் துறை கூட்டு முயற்சியுடன் துவங்கப்பட்ட, புதிய கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் துவக்க விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

ஜிஆர்ஜி, எல்ஜி டிஜிட்டல் இன்னோவேஷன் டோஜோ என்று பெயரிடப்பட்டுள்ள இந்த புதிய ஆராய்ச்சி மையத்தினை ஜிஆர்ஜி கல்வி மையத்தின் தலைவர் நந்தினி மற்றும் எல்ஜி எக்யூப்மென்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஜெயராம் வரதராஜ் ஆகியோர் இணைந்து, ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

விழாவில் பேசிய, எல்ஜி எக்யூப்மென்ட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஜெயராம் வரதராஜ், டிஜிட்டல் இன்னோவேஷன் டோஜோ என்ற இந்த புதிய கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், மாணவிகளின் திறமை மற்றும் செயல்திறனை ஊக்கப்படுத்தும் என்று நாங்கள் உறுதியளிப்பதுடன், இம்மையம் எதிர்காலத்தில் திறன்மிக்க மாணவிகளை உருவாக்க வழிவகை செய்யும் மையமாக விளங்கும். இந்த மையத்தில் மாணவிகளுக்கு தேவையான கணினிகள் மற்றும் அதற்கான மென்பொருட்களை எல்ஜி நிறுவனம் வழங்கும். ஒரே நேரத்தில் 20 பேர் இந்த மையத்தில், பயிற்சி பெற முடியும். இங்கு பயிற்சி பெறும் மாணவிகளுக்கு தகவல் தொழில்நுட்ப தளமான, செயற்கை நுண்ணறிவு, இயந்திரப் படிப்பு, மெஷின் லேர்னிங், விர்ச்சுவல் ரியாலிட்டி மற்றும் ரோபோடிக் பிராசஸ் ஆட்டோமேஷன் ஆகிய துறைகளில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. மாணவிகள் அதற்கு தங்களை தயார் படுத்தி கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் யசோதா தேவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Scanned with CamScanner